-4 SEP 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 19 வெள்ளிக்கிழமை (04-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 240

# வன்னி அகதி முகாம்களில் இருப்போருக்கே நிவாரணம்!

## மன்னாருக்கு சென்றால் ஏனையோரும் பெறலாம்

கொழும்பு, செப்டெம்பர் 4

**இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்குமட்டுமேஇனி மேல் இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும். ஏனையோர் மன்னார் நகரில் உள்ள அகதிமுகாமுக்கு வந்து தங்கினால் மட்டுமே நிவாரணம் வழங்கப்படும்.**

அத்தியாவசிய சேவைகள் நாயகம் என். கே. ஒபடகே மேற்கண்டவாறு அப்பகுதி அரச அதிபர்களுக்கு அறிவித்துள்ளதாக தெரியவந்தது.

அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு;-

★ இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹண்டி கப்பல் வருகிறது

ஹண்டி கப்பல் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்குரிய பொருள்களை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறை நோக்கி புறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தில் தற்பொழுது வாதுவ கப்பலில் பொருள்கள் ஏற்றப்பட்டு வருகின்றன.

அதேசமயம் யாழ். செயலகத்துக்குரிய உலர்உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு குமண கப்பல் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டுள்ளது. (இ-5)

## இடம்பெயர்ந்த அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க அலவி முயற்சி

### ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவார்

கொழும்பு, செப். 4

இடம்பெயர்ந்து வாழும் சகல மக்களுக்கும் முழுமையாக உலர் உணவு நிவாரணம் கிடைக்க மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலவிமௌலானா முயற்சி மேற்கொண்டுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் அரசாங்கத்தால் குறைக்கப்பட்டதும் —

பின்னர் ஜனாதிபதியுடன் ஈ. பி. டி. பி. தூதுக்குழு பேச்சு நடத்தியதையடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அது நீக்கப்பட்டதும் தெரிந்தவையே.

அமைச்சர் அலவி மௌலானா இடம்பெயர்ந்த சகலருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ். ரபீக்கிடம் கேட்டுள்ளார்.

எதிர்வரும் ஞாயிறு கொழும்பு திரும்பும் ஜனாதிபதியுடன் பேசி இந்த நிவாரணக் கொடுப்பனவுக்காக நடவடிக்கை எடுக்கப்பேவதாக அமைச்சர் நேற்றிரவு தெரிவித்தார். (இ-3)

## முல்லைத்தீவில் 2 ஆவது நாளாக உண்ணாவிரதம்

நிவாரண வெட்டைக் கண்டித்து முல்லைத்தீவு செயலகம் முன்பாக இரண்டாவது நாளாக நேற்றும் உண்ணாவிரதம் இடம்பெற்றது.

300 பேர் வரையில் இதில் கலந்து கொண்டனர்.

வன்னிக்கு வந்துள்ளயாழ். ஆயர் அதி-வண தோமஸ் சௌந்தரநாயகம், மன்னார் ஆயர் அதி-வண இராயப்பு யோசேப்ஆகியோர் உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டனர்.

அடுத்த வாரம் ஜனாதிபதியை தாம் சந்திக்க இருப்பதாகவும் —

அச்சமயம் ஜனாதிபதியிடம் இது விடயத்தைத் தெரிவிப்பதாகவும் — அவர்கள் தெரிவித்தனர். (இ-3)

## இலங்கைப் பிரச்சினையை ஐ.நா.வின் கவனத்துக்கு கொண்டுவருவேன்

### அயர்லாந்து பேராசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

"இலங்கையில் தமிழ் மக்கள் படும் இன்னல்கள், அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் ஆகியவை குறித்து ஐ. நா. மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் கவனத்துக்குக் கொண்டுவருவேன்."

இப்படி அயர்லாந்து மோதல் இணக்கப்பாட்டு நிபுணர் பேராசிரியர் தோமஸ் பிராண்ட் பிறேஸர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அவர் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடந்த வைபவத்தில் உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

"பிளவுபட்ட சமூகங்களுக்கு ஒரு முன்மாதிரியான வட-அயர்லாந்து உடன்படிக்கை" என்ற தலைப்பில் பேராசிரியர் பிறேஸர் உரையாற்றினார்.

"இலங்கையில் இதுவரை 60 ஆயிரம் தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அவர்கள் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். மேற்குநாடுகளில் இடம்பெறும் மோதல்கள் குறித்து ஆர்வம் காட்டும் ஐ. நா. அமைப்பு இலங்கைத் தமிழர் விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது."

அதற்குப் பதில் அளித்த அவர், சர்வதேச மட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தாக்குதல்

மட்டக்களப்பு, செப். 4

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, கறுவாக்கேணி சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கிளைமோர் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின்பு துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது.

(இ-21)

## கிளிநொச்சிப் பகுதியில் இராணுவ நடவடிக்கை!

கிளிநொச்சியில் இருந்து மேற்கு நோக்கியும், கிழக்கு நோக்கியும் படையினர் நேற்று முன்தினம் மட்டுப்படுத்தப்பட்ட ராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

படையினருக்கு உதவியாக கவச வாகனங்கள், பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டன.

புலிகளின் பங்கர்களை அழிப்பதற்காகவே இந்த மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது. (இ-7)

## பொலீஸ் தேடுதலில் கைக்குண்டுகள் மீட்பு

### தென்பகுதியில் சம்பவம்

கொழும்பு, செப். 14

மாத்தளை களுதாவளைப் பகுதியில் பொலீஸார் மேற்கொண்ட தேடுதலில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து தேடுதல் மேற்கொண்ட பொலீஸார் ஒரு வீட்டின் தண்ணீர் தாங்கியில் இருந்து குண்டுகளை மீட்டனர்.

இது தொடர்பாக ஒரு முஸ்லிம் பெண்ணும், தமிழ் பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-3)

## புளொட் அமைப்பினால் இருவர் நேற்று விடுவிப்பு

வவுனியா, செப். 4

புளொட் அமைப்பின் தளபதியான தாசன் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இருவர் நேற்று வவுனியாவில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

பளையைச் சேர்ந்தவரான மோகனதாஸ் வரதன் (23 வயது), நவாலி வடக்கை சேர்ந்த கந்தையா மகேஸ்வரன் (26 வயது) ஆகியோர் புளொட் அமைப்பினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருந்தனர்.

தாசன் கொலைச் சம்பவத்துடன் இவர்களுக்கு எதுவித தொடர்பும் இல்லை எனத் தெரியவந்ததையடுத்து இவர்களை விடுதலை செய்வதாக வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கே. சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்கள் முன்னிலையில் இருவரும் செஞ்சிலுவைச் சங்க வடக்கு - கிழக்கு இணைப்பாளர் சிவநாதன் கிஷோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை உறவினர்களிடம் ஒப்படைக்க அவர் நடவடிக்கை எடுத்துள்ளார். (இ-3)

## தேர்தலை நடத்தக் கோரி மேலும் இரு மனுக்கள்

கொழும்பு, செப். 4

அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் மாகாண சபைத் தேர்தலை பின்போட்டமையை ரத்துச் செய்யக் கோரி நேற்று மேலும் இரு மனுக்கள் தாக்கல் செய்யப் பட்டன.

ஜே. வி. பி. அமைப்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

சுதந்திர வெகுஜன அமைப்பு தேர்தல் பின் போடப்பட்டமை அடிப்படை உரிமையை மீறும் செயல் என்று தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

நேற்று முன்தினம் ஐ. தே. க. இது தொடர்பாக இரு மனுக்களைத் தாக்கல் செய்தது தெரிந்ததே. (இ-3)

## மோதல்

யாழ்ப்பாணம், செப். 4

ஓலுமடுவுக்கு மேற்கேயும் மாங்குளத்துக்கு கிழக்கேயும் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

ஆர். பி. ஜி. மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் மூலம் புலிகளின் பங்கர்கள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சீனியர் தியாகராசா

(உரிமையாளர்; எஸ். ரி. ஆர். பான்சி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும், யாழ். ஆசீர்வாதப்பர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சீனியர் தியாகராசா 03-09-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றெஜீனா றீற்றம்மாவின் அன்புக் கணவரும், கிறிஸ்ரி வசந்தராஜா (பிரான்ஸ்), அனிஸ்ரி வதனராஜா — டோல் (பிரான்ஸ்), றெஜிவதனி காமினி, மாலினி (ஜேர்மனி), நளாயினி, வண்ணராஜா (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசிங்கம் (காசாளர், க.பொ.கூ.), ஞானப்பிரகாசம் (அதிபர், றோ. க. த. க. பாடசாலை, வலைப்பாடு), சந்திரலிங்கம் (ஜேர்மனி), வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், தினேஸ்குமார், காலஞ் சென்ற கிரிசாந்தி, பானுபிரியங்கா, தர்சன், கோபிகா, தீபிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 06-09-98 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு (புதியநேரம்) கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ ஜெயசிங்கம்
(மருமகன்)

46/11, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(58931)

## பாலன் சந்திரன்

(பிரதேச சபை உப காரியாலயம் ஏழாலை)

கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்த பாலன் சந்திரன் காலமாகிவிட்டார்.

அன்னார் விமலாம்பிகையின் அன்புக் கணவரும், மகிழன், மகிழ்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பாலன், இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், சுகுமார் (சுவிஸ்), ஜெயக்குமார் (லண்டன்), புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராசா, மகாதேவன் (ஆசிரியர்), சுப்பிரமணியம், கோகுலநாதன், பத்மநாதன், காலஞ்சென்ற தேசிகநாதன், யோகநாதன் (ஜேர்மனி), மனோன்மணி, காலஞ்சென்ற சிவபாக்கியம், நகுலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற நடராசா, சுந்தரலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4 - 9 - 98) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 10 30 மணியளவில் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி சந்திரராஜனி தர்மலிங்கம்
(ஆசிரியர்)
திருமதி உதயகலா கனகராசா
(ஆசிரியர்)

"கிருஸ்ணவாசம்"
மல்லாகம்.

(58927)

## ப. சின்னத்துரை

(முன்னை நாள் கொக்குவில் கோண்டாவில் 14 ஆம் வட்டார அங்கத்தவர்)

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த ப. சின்னத்துரை அவர்கள் 03 09 1998 அன்று காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், சந்திரகுமாரியின் அன்புத் தந்தையும், சிவலோகநாதன் (இ.மி.ச, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும், நிமாலினி, தமிழினி, தாரணி, சுஜீத், சஜீத், சத்தியகுமார் (பாதுகாப்பு உத்தியோகத்தர், பல்கலைக்கழகம்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவரின் இறுதிக்கிரியைகள் 05 09 1998 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
நா. சிவலோகநாதன்
[மருமகன்]
K. G சத்தியகுமார்
[பேரன்]

ஸ்ரீ நாராயண வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[58926]

## காசிநாதன் சிவபாக்கியம்

சுன்னாகம் தில்லகட்டியைச் சேர்ந்தவரும் சிங்கப்பூரில் வசித்த வருமாகிய காசிநாதன் சிவபாக்கியம் 1. 9. 98 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி மாணிக்கப்பிள்ளையின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற காசிநாதனின் மனைவியும், Dr சி. த. காசிநாதன் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற கா. குணபாக்கியம், கா. சற்குணம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. அரியம்

சக்தி பாமசி,
சுன்னாகம்.

(5 8930)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி
வெள்ளி, சனி
ரகுவரன் - சங்கீதா
நடித்த
**கள்வன்**
அடுத்த வெளியீடு
அர்ஜுன்-சிம்ரான்
நடித்த
**தாயின் மணிக்கொடி**
(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212223

(58891)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
இன்று முதல்
கமல் [ இரு வேடம் ]
சுகன்யா, கவுண்டமணி
செந்தில் நடித்த
**இந்தியன்**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30

(58928)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த
**முத்து**
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று முதல்
சரத்குமார் - ஊர்வசி
பார்த்திபன் - நக்மா
நடித்த
**அரவிந்தன்**

(சி/4737)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதி, கண்டுவில் மேற்கு ஒழுங்கையில் 'பூங்கா' என்ற பெயரை உடைய வீடும், அது அமைந்துள்ள 7 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டியவர்கள் அதே ஒழுங்கையைச் சேர்ந்த

உ. பரமநாதனுடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/4763)

## மாபெரும் கழிவு விற்பனை

எஸ். ரி. சி. — யாழ்ப்பாணக் கிளை

**50 %. வரை கழிவு**

1. விவசாய உபகரணங்கள்:-
மண்வெட்டி, சவல், குப்பைவாரி, பிக்கான் மற்றும பல
2. விளையாட்டு உபகரணங்கள்:-
பற்மின்ரன் செற், கிரிக்கெட் ஸ்ரம்ஸ்
3. வீட்டுப் பாவனைப் பொருள்கள்:-
சுடுநீர்ப் போத்தல், குடைகள், அலுமினியப் பானைகள், மெலமைன் பாத்திரங்கள், கரண்டி, கத்தி மற்றும் பல
4. தானியங்கிப் பொருள்கள்:-
பாரம் தூக்கி, லொறி ரயர்கள்
(யொகோகாமா 900X20)
5. மின் உபகரணங்கள்:-
5 K.V.A. லிஸ்றர் என்ஜின் ஜெனரேற்றர், ஹொண்டா ஜெனரேற்றர், ரி. வி. பூஸரர்

மிதி வண்டி உதிரிப் பாகங்கள்:-
18'', 21'' மற்றும் 22'' க்கு உரியவை

ஆய்வு கூட உபகரணங்கள்:-
இரத்தப் பரிசோதனை ஊசி, பல நோக்கு மானி, நுணுக்குக்காட்டி மேலும் பல கருவிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அளவே உள்ளது
முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற முறையில்
04-09-98 முதல் வழங்கப்படும்.

அரசாங்க வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம்
இல. 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(58933)

## 3 ஆம் ஆண்டு நீங்கா நினைவு

## வே. நவரத்தினக்குருக்கள்

(ஆசிரியர், யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்)

பிறப்பு - 11-8-41 பிரிவு - 7-9-95

உலகமெனும் சிறைச்சாலையில்
ஆயுள் கைதியாக எமை உருவாக்கி
நீர் மட்டும் விடுதலை பெற்றுவிட்டீர்!
ஒவ்வொரு நிமிடமும் சிறையில் நாம் படும்
வேதனையை யாரிடம் சொல்லியழ,
ஆற்றுவாரில்லை தேற்றுவாரில்லை.
அவ்வுலகில் இருந்து எம்மை ஆசீர்வதிக்கவாவது
உமது கரம் உயரட்டுமே!

நெல்லண்டை,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(58925)

# மரண அறிவித்தல்

## சின்னையா மார்கண்டேயக்குருக்கள்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா மார்கண்டேயக்குருக்கள் 3-9-98 இல் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (4-9-98) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10-00 மணியளவில் கொத்துத்துறை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி சசிகலா கிருஷ்ணமூர்த்தி
(மகள், ஐயனார் கோயில அனலைதீவு)

அற்கின்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

(58934)

## புதுக்கடை திறப்பு விழா

**SHABEENA ELECTRONICS**

**"சபீனா எலக்ரோனிக்ஸ்"**

RADIO, TV, VIDEO DECK, SERVICE AND SPARE PARTS SALES

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் (5-9-98) சனிக்கிழமை பகல் 10. 50 முதல் 12. 50 மணி வரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில் மேற்படி நிறுவனம் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதனை எமது அன்பு வடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.

S. C. SAYANTHAN
(சிங் மாஸ்டர்)

இருபாலைச் சந்தி.
கோப்பாய்.

(58920)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமானத்தில் மிரட்டல் கடிதம்

குவைத், செப். 4

குவைத்தில் இருந்து டுபாய் நோக்கிச் சென்ற பயணிகள் விமானம் ஒன்றில் பிலிப்பீ ஸில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் மிரட்டல் கடிதம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து விமானம் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டு அதில் இருந்த 60 பயணிகளும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். அவர்களின் கையெழுத்துக்களும் சோதிக்கப்பட்டன.

(ஐ-ரீ)

## வர்த்தக நிலையங்களைத் திறக்க முடிவு

பாக்தாத், செப். 4

ஈராக்கும், ( ரியாவும் பரஸ்பரம் மீண்டும் வர்த்தக நிலையங்களை அமைக்க முடிவு செய்துள்ளன.

18 வருடங்களுக்கு முன்னர் இரு நாடுகளும் வர்த்தக நிலையங்களை மூடி இருந்தன.

(இ)

230 பயணிகளுடன்

# சுவிஸ் விமானம் கடலில் வீழ்ந்தது!

வாஷி டன், செப். 4

230 பயணிகளுடன் நியுயோர்க்கில் இருந்து ஜெனிவா நோக்கிப் புறப்பட்ட "சுவிஸ் எயர் லைன்ஸ்" விமானம் ஒன்று கனடா கரைக்கு அப்பால் அத்திலாந்திக் சமுத்திரத்தில் வீழ்ந்து நொறுங்கியது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நியுயோர்க்கில் இருந்து புறப்பட்ட இந்த 'எம். டி-11' ரக சுவிஸ் விமானம் புறப்பட்டு ஒருமணி நேரத்தின் பின் கனடாவின் நொவஸ்கோட்டியா மாகாணத்துக்கு அப்பால் அத்திலாந்திக் கடலில் வீழ்ந்தது.

விமானி விமானத்தை அப்பகுதியில் அவசரமாகத் தரையிறக்க முற்பட்டபோதே விமானம் வீழ்ந்து நொறுங்கியதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கனெடிய கடற்படை, கரையோரக் காவல் பிரிவு மற்றும் மீன்பிடிப்படகுகள் இணைந்து அவசர மீட்புப்பணியில் ஈடுபட்டிருக்கின்றன. இந்த விமானத்தில் இருந்த பெரும்பாலான பயணிகள் உயிரிழந்துவிட்டிருப்பதாக அஞ்சப்படுகிறது.

[ஐ]

## பயணிகள் சிலர் உயிருடன் மீட்பு!

மொன்றியல், செப். 4

கனடாவின் நொவஸ் கோட்டியா மாகாணத்துக்கு அப்பால் 11 கிலோ மீற்றர் தொலைவில் அத்திலாந்திக் கடலில் வீழ்ந்த சுவிஸ் விமானத்தில் இருந்த சில பயணிகள் உயிருடன் மீட்கப்பட்டிருப்பதாக நேற்று மாலை பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இராணுவ ஹெலிகளின் உதவியுடன் கடலில் இருந்து மீட்கப்பட்ட சிலர் ஆஸ்பத்திரிகளுக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை—

உயிரிழந்த பயணிகளின் உடல்கள் சில நிமிட இடைவெளிகளுக்குள் ஒன்று என்ற வீதம் மீட்கப்பட்டு வருவதாக மீட்புப் பணியாளர்களை மேற்கோள் காட்டி பி. பி ஸி நேற்று மாலை தெரிவித்தது.

காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும், சடலங்களை இனங்காணவும் மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் சிக்கிய பயணிகளில் பெரும்பாலானோர் சுவிஸ் மற்றும் அமெரிக்க பிரஜைகளாக இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

[ஐ]

# இலங்கை, காஷ்மீர் பிணக்குகளை சுட்டிக்காட்டி மண்டேலா உரை!

டேர்பன், செப். 4

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் அணிசேரா நாடுகளின் 12 ஆவது உச்சி மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றிய அதிபர் நெல்சன்மண்டேலா இலங்கை மற்றும் காஷ்மீர் விவகாரங்களையும் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

காஷ்மீர் விவகாரம்குறித்து அதிபர் மண்டேலா குறிப்பிட்டிருப்பது அந்த விவகாரத்தை தனது உள் விவகாரம் என்று வலியுறுத்திக் கூறிவரும் இந்தியாவுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

உலகெங்கும் இடம்பெறும் வன்செயல்கள் பற்றிக்கூறிய அதிபர் மண்டேலா பின்வருமாறு குறிப்பிட்டார்:—

கொசோவோவானாலும் சரி, கொங்கோ ஜனநாயகக் குடியரசிலானாலும் சரி அல்லது ஆப்கானிஸ்தானில் அல்லது இலங்கையிலானாலும் சரி அங்கெல்லாம் நடக்கும் வன்முறைகளை எதிர்த்தே நான் பேசுகிறேன். நான் எதிர்த்துப் பேசும் வன்முறையானது அனைவருக்கும் எதிரான வன்முறை ஆகும் என்றார்.

இந்த விவகாரங்களுக்கான தீர்வைக் கண்டுபிடிக்க ராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் மண்டேலா வலியுறுத்தினார்.

காஷ்மீர் விவகாரம், தென்னாசிய அணுஆயுத நிலைவரம் குறித்தும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

காஷ்மீர் விவகாரம்குறித்து மண்டேலா தெரிவித்த கருத்துக்கு இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தனது உரையில் பதிலளிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. இந்தியப் பிரதமரின் உரை நேற்று மாலை இடம்பெறவிருந்தது.

(ஐ-ரீ)

## உலக அரங்கில்

## டேர்பனில் வாகனக் குண்டு!

டேர்பன், செப். 4

அணிசேரா நாடுகளின் 12 ஆவது உச்சிமாநாடு நடைபெறும் டேர்பன் நகரில் தென்னாபிரிக்காவுக்கான அமெரிக்கத் தூதர் தங்கியிருந்த கட்டடத்துக்கு வெளியே வெடி மருந்துடன் நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பின்னர் அது பொலிஸாரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

(ஐ-ரீ)

# இந்தியா அதிருப்தி!

புதுடில்லி, செப். 4

அணிசேரா நாடுகளின் 12 ஆவது உச்சி மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய தென்னாபிரிக்க அதிபர் டாக்டர் நெல்சன் மண்டேலா காஷ்மீர் விவகாரம் பற்றிக் குறிப்பிட்டது குறித்து இந்திய அரசு அதிருப்தியடைந்துள்ளது.

அணிசேரா மாநாடு போன்ற மேடைகளில் இரு தரப்பு விவகாரங்களை எழுப்பக்கூடாது; அதுவும் மாநாட்டுக்கு தலைமை வகிக்கும் ஒருவர் எழுப்பக்கூடாது என்று புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

காஷ்மீர் பற்றி டாக்டர் மண்டேலா குறிப்பிட்டுள்ள போதிலும் எந்த நாட்டின் மீதும் இந்தியாவுக்கு மனக்கசப்பு இல்லை என்று இந்திய வானொலி கூறியது.

மண்டேலாவின் கூற்று மனதைப் புண்படுத்தியதாக சில இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை—

காஷ்மீர் விவகாரத்தை இழுத்துப் பேசியதற்காக டர்பனில் தங்கியுள்ள பிரதமர் வாஜ்பாய் மண்டேலாவிடம் தமது ஏமாற்றத்தைத் தெரிவித்தார் என்றும் அதற்கு மண்டேலா பதில் ஏதும் கூறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## இந்திய-ரஷ்ய உறவு தொடரும்!

### பெர்னாண்டஸ் தெரிவிப்பு

இந்தியாவுடன் இராணுவ ஒத்துழைப்பை நிறுத்திக் கொள்ளுமாறு அதிபர் பில் கிளின்ரன் ரஷ்ய அரசாங்கத்தைக் கேட்டுள்ள போதிலும் இந்திய — ரஷ்ய உறவுகள் தொடர்ந்து பேணப்படும்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவில் அணுவாயுதப் போட்டி ஒரு போராக மாறி வல்லரசுகளும் அதில் இழுக்கப்படலாம் எனக் கிளின்ரன் கூறியது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ரஷ்யா இந்தியாவின் நீண்டகால நட்பு நாடு. இந்திய— ரஷ்ய நட்புறவு காலத்தின் சோதனையைக் கடந்து [illegible] கிறது என்றும் அவர் கூறினார்.

(ஐ)

## கர்ப்பிணிப் பெண் மீது பாலியல் வல்லுறவு!

### இந்தியப் படைவீரர்கள் கைது

புதுடில்லி, செப். 4

கர்ப்பிணிப் பெண் ஒருவர் மீது பாலியல் வல்லுறவு புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் இந்திய இராணுவ வீரர்கள் சிலர் கைது செய்யப்பட்டிருப்பதாக யூ. என். ஐ செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஜம்மு காஷ்மீரில் முஸ்லிம் கர்ப்பிணி ஒருவரை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாராமுல்லா மாவட்டத்தில் பஸ் நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி பெண்ணை வழி மறித்த சிப்பாய்கள் அவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## சீன தொல்பொருள்களை அமெரிக்கா ஒப்படைத்தது!

வாஷிங்டன், செப். 4

சீனாவுக்குச் சொந்தமான 2 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த புராதன சின்னங்களை அமெரிக்க அரசு சீனாவிடம் மீண்டும் கையளித்துள்ளது.

இவற்றில் கான், டான், மிங் ஆகிய அரச பரம்பரைக் காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களும் அடங்குகின்றன.

இவை சீனாவில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு அமெரிக்காவுக்குள் விற்பனை செய்யப்பட்டபோது அமெரிக்க சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டிருந்தன.

சீனா 1984 ஆம் ஆண்டில் இன்டர்போல் எனும் சர்வதேச பொலிஸ் பிரிவில் சேர்ந்துள்ளது. இதன் பிரகாரமும் இந்த சின்னங்கள் மீளளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-6)

## கம்போடியாவில் குந்தியிருப்புப் போர்!

லண்டன், செப். 4

கம்போடியாவில் அண்மையில் நடைபெற்ற தேர்தல்களில் தில்லுமுல்லு இடம்பெற்றதாகத் தெரிவித்து, அந்தத் தேர்தலில் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்ட ஹுன் சென் அரசு பதவி விலக வேண்டும் என்று கூறி, நாடாளுமன்றத்துக்கு வெளியே கடந்த ஒருவார காலமாக எதிர்க் கட்சிகள் குந்தியிருப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி வருகின்றன.

ஹுன் செனால் பதவி கவிழ்க்கப்பட்ட இளவரசர் [illegible] இப்போராட்டத்தில் பங்குபற்றி வருகின்றார், இப்போராட்டத்தால் அங்கு பெரும் அரசியல் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

(ஐ-உ)

## அமெரிக்க உணவகம் தாக்கப்பட்டது

கராச்சி, செப். 4

பாகிஸ்தானின் கராச்சி நகரில் அமெரிக்கர்களால் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலை ஒன்றை இளைஞர் கும்பல் ஒன்று தாக்கியுள்ளது. இத் தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான், சூடான் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களின் எதிரொலியாகவே இச் சம்பவம் இடம் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

## ஜனாதிபதி சந்திரிகா உரை

டேர்பன் செப். 4

உலக பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அணிசேரா நாடுகள் தமக்குள் நல்லுறவை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்– என்று இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்காவின்டேர்பன் நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் புதன்கிழமை உரையாற்றிய போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சர்வதேச பயங்கரவாதம், சர்வதேச பாதுகாப்பு ஆகிய இரு விடயங்களில் கவனம் செலுத்தவேண்டி உள்ளது. இந்த இரு விடயங்களிலும் நாம் ஒருமித்தகுரலில் பேசிச் செயற்படவேண்டி உள்ளது– என்றும் சந்திரிகா குமாரதுங்க குறிப்பிட்டார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**இலகு திருமண சேவை**

28வயது, கேடடை, கனடா மணமகனுக்கு மணப்பெண் தேவை. Sponser உண்டு. Doctors, Engineers. உள்நாட்டு. வெளிநாட்டு மணமகன்கள் உண்டு. தொடர்பு: ஞாயிறு காலை வேளைகளில். துரை விமலா, 958/8, K.K.S. வீதி, யாழ். நாச்சிமார் கோவிலடி. (58855)

**மோதிரம்**

கொக்குவில், மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் நேற்று முன்தினம் மோதிரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் மேற்படி முகவரியில் நல்லூர் ப.நோ.கூ. சங்க 13ஆம் கிளைக்கு முன்பாகவுள்ள வல்லிபுரம் கிருஸ்ணபிள்ளையிடம் தொடர்பு கொண்டு ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (58890)

**விற்பனைக்கு**

Screen Easy Chair, 2 முதிரை அலுமாரி, 2 Meat Safe, 2 பெரிய மேசை லாச்சிகள் உள்ளது. 1 கந்தோர் மேசை, 2 Safe, வாங்கு, T. V Stand முதிரை மரத்தால் செய்தது, பெரிய சேந்தைக் கட்டில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செ. இராமநாதன், மயிலணி, சுன்னாகம். (58894)

**பேடுக குஞ்சு**

ஒரு கிழமை வளர்ச்சி அடைந்த பிறிமா கைலைன் பிறவுண் பேடுக் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (58882)

## ஆங்கில கற்கை நெறி

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிரிவில் நாளைசனிக்கிழமை தொடர்பாடலுக்கான ஆங்கிலக் கற்கைநெறியின மூன்றாவது பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதனை அடுத்து எதிர்வரும் 12 ஆம் திகதி அலுவலக முகாமைத்துவக் கற்கை நெறியின் 2ஆம் பிரிவு ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை —

ஏற்கனவே நடந்துமுடிந்த தொடர்பாடலுக்கான கற்கை நெறியின இருபிரிவுகளுக்கும் அலுவலக முகாமைத்துவ கற்கைநெறியின் முதலாவது பிரிவுக்குமான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-6)


யாழ். பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

பொருளியல்

S. வரதராஜன்

G, A. Q.,

Ist in Com.

சனி, ஞாயிறு 1 – 2

BA, BA. P. I

சனி, ஞாயிறு 3 – 4

ஆரம்பம்: 05-09-98 சனி

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (58914)



## போட்டோ கொப்பி

ரூபா 4 மட்டும்

ஸ்ரீ முருகன் T. P. நிலையம், நீர்வேலி

கந்தசாமி கோயில் வடக்கு வீதி. (58916)


## இலங்கை மின்சார சபை

இலங்கை மின்சார சபை ஒப்பந்தகாரரை

## பதிவு செய்தல்

இலங்கை மின்சாரசபையின் யாழ்ப்பாணம் பிரதேச காரியாலய நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சேவை இணைப்பு வழங்குவதற்கு (தூண்கள் நிமிர்த்துவது உட்பட) ஒப்பந்தகாரரைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

மேற்படி வேலையில் ஈடுபட விரும்பும் தகுதி வாய்ந்த, முன் அனுபவமுள்ளவர்கள் இலங்கை மின்சார சபையின் சுன்னாகத்தில் அமைந்துள்ள பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திலும், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் 536/1ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரதிப்பொதுமுகாமையாளர் (வடக்கு) அலுவலகத்திலும் பெறக்கூடியதான விண்ணப்பப் படிவத்தை மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 250 செலுத்திப் பெற்று 15-09-98-இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இலங்கை மின்சார சபை,
சூழல் மற்றும் அபிவிருத்தி
வேலைகளுக்கு கை கொடுக்கும்
இலங்கை மின்சார சபை.

மின் பொறியியலாளர் (யாழ். பிரதேசம்)
இ. மி. ச,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம். 1998-09-01. (சி-4758)

## நன்றி நவிலலும்

31 ஆம் நாள் நினைவுக்கான அழைப்பும்



அமரர் நெல்லை க. பேரனின் தந்தை

## நடேசு கந்தசாமி

பிறப்பு 18–09–1919 இறப்பு 05–08–1998

எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வுகளில் நேரில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் நன்றி கூறி 5-9-98 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலையில் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

முருகமூர்த்தி வீதி,
நெல்லியடி. (சி/4756)

### மினி ஒலிம்பிக்

# யாழ். பல்கலைக்கழகம் 5 ஆவது இடத்தில்

யாழ்ப்பாணம், செப். 4

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையில் ருகுணு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மினி ஒலிம்பிக் போட்டிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு 3 தங்கப்பதக்கங்கள் உட்பட மொத்தம் 11 பதக்கங்கள் கிடைத்துள்ளன.

நடந்து முடிந்த இப் போட்டிகளில் 10 பல்கலைக்கழகங்கள் கலந்து கொண்டன. இவற்றில் கொழும்பு பல்கலைக்கழகம் சம்பியனாகியது.

பேராதெனியா பல்கலைக்கழகம் 2 ஆம் இடத்தையும், மொறட்டுவ பல்கலைக்கழகம் 3ஆம் இடத்தையும், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் 4ஆம் இடத்தையும், யாழ். பல்கலைக்கழகம் 5 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கே. சிவகௌரி 100 மீற்றர், 200 மீற்றர் ஆகிய ஓட்டங்களில் தங்கப்பதக்கம் பெற்றார். இவர் 100 மீற்றர் தூரத்தை 13 4 செக்கனிலும், 200 மீற்றர் தூரத்தை 27 செக்கனிலும் ஓடிக்கடந்தார்.

இவரைத் தவிர யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியும் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தது. அணியில் விளையாடிய 15 வீரர்களுக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

ஏனைய பதக்கங்கள் பெற்றவர்கள் விவரம் வருமாறு:-

★ எம். ஜெயராஜ்:- 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் வெள்ளிப்பதக்கம்.

★ எஸ். மகிந்தன்:- தடியூன்றிப் பாய்தலில் வெள்ளிப் பதக்கம்.

★ எஸ். குமுதினி:- நீளம் பாய்தலில்வெள்ளிப்பதக்கம்.

★ ஆர். ஆர். ராஜராஜன்:- 400 மீற்றர் தடைதாண்டலில் — வெண்கலப்பதக்கம்.

★ வலைப்பந்தாட்ட அணி :- வெண்கலப்பதக்கம். அணியின் 10 வீரர்களுக்கும் பதக்கம் வழங்கப்பட்டது.

★ கூடைப்பந்து (பெண்கள்) :- வெண்கலப் பதக்கம்— அணியின் 12 வீரர்களுக்கும் பதக்கம் வழங்கப்பட்டது.

★ 'செஸ்' அணி— வெண்கலப்பதக்கம். அணியின் 8 வீரர்களுக்கும் பதக்கம் வழங்கப்பட்டது.

இப்போட்டிகளில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மொத்தம் 52 வீரர்கள் பதக்கம் பெற்றனர். (ஐ-6)

## சந்நிதி உற்சவகால நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 4

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ள தெய்வீகக் கலை நிகழ்ச்சிகளில் —

இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கலைச்செம்மல் எல். திலகநாயகம் போலின் இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. (ஐ-8-173)

## அன்னை தெரேசாவுக்காக நன்றித் திருப்பலி

இறை அடியாராகிய அமரரான அன்னை தெரேசா விண்ணகம் சென்ற ஆண்டு நிறைவு பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இம்மாதம் 5 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். புனித மரியன்னை பேராலயத்தில காலை 6.30 மணிக்கு அன்னையின் புனித வாழ்வுக்கும், பணிக்கும் நன்றியாக கூட்டுத் திருப்பலி நடைபெறும்.

அன்னையின் ஆண்டு நிறைவில், பாதிக்கப்பட்ட யாழ். மக்களுடன் இணைந்து, துன்புறும் எம் மக்கள் துயர் துடைக்கவும், அன்னை மூலம் இறைவனை வேண்டவும் அன்னையின் அன்புப்பணி சகோதரிகள் வருகை தந்திருக்கிறார்கள். இந்த நன்னாளிலேயே தங்கள் புனித பணியை இரத்தம் தோய்ந்த இம் மண்ணில் தொடங்குகிறார்கள்.

இந்த நிகழ்வில், அனைத்துக் குருக்கள், துறவியர்கள், பொதுநிலை சகோதர சகோதரிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

அன்னை தெரேசாவின்
அன்புப்பணி சகோதரிகளும்,
யாழ். மறைமாவட்ட குரு முதலவரும்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (58915)

கிராம அலுவலர் தரம் Iக்கான பதவி உயர்வு பெற்றமையிட்டு

## வாழ்த்துக்கள்

## திரு. க. க. வேலாயுதபிள்ளை

சாதி, மத, பேதமின்றி எமது கிராம மக்களுக்கு இரவு பகலெனப்பாராது சேவை புரிந்து தமது சேவையின் Iஆம் தர பதவி உயர்வு பெற்றமையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

நீடூழி வாழவும், தொடர்ந்து பதவியில் உயர்ந்த மகோன்னத நிலையை அடையவும் அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

- காங்கேயன் வாழ் மக்கள்

(58911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதியின் தண்ணீர்த் தேவைக்கு மழைநீரைத் தேக்கி வைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 4

தீவுப்பகுதிகளில் மழை நீரைத் தேக்கி வைத்து குடி தண்ணீராகப் பாவிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை உத்தேச திட்டமொன்றை வரைந்துள்ளது.

தீவுப் பகுதிகளில் குடி தண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதன் காரணத்தால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவர்களின் பிரச்சினையைத் தீர்க்குமுகமாகவே இத்திட்டத்தை செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி மழைபெய்யும் போது கூரைகளில் இருந்து வழியும் நீரை 'பீலி' வழியாக வடிகட்டும் கருவிக்குள் செலுத்தி வடிகட்டி, அவ்வாறு வடிகட்டிய நீரை தாங்கிகளில் சேகரித்து வைத்து பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலைநாட்டுப் பகுதிகளில் இத்திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதனை அடுத்து இதனைத் தீவுப்பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை இப்பகுதிகளில் செயற்படுத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி தற்போது ஆராயப்பட்டு வருகிறது. (ஐ-6)

## திருட்டுநகைகள் தொடர்பாக:

# நகைக் கடைக்காரருக்கு பொலிஸ் அறிவுறுத்தல்!

யாழ்ப்பாணம், செப். 4

நகைகளை அடகு வைப்பவர்களிடமிருந்தும், விற்பனை செய்பவர்களிடமிருந்தும் அதுதொடர்பாக கிராம சேவை உத்தியோகத்தர்களின் சான்றிதழ்களைப் பெற்று அவை திருட்டு நகையில்லை என்பதனை உறுதிப்படுத்திய பின்னரே பெற்றுக் கொள்ள வேண்டும்.

அடகு பிடிப்பவர்களுக்கும், நகைக்கடை உரிமையாளர்களுக்கும் யாழ். பொலிஸ் நிலையத் தலைமைப்பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் மேற்கண்டவாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக நகைத் திருட்டு, நகைக் கொள்ளைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நகைகள் நகரக்கடைகளுக்கு விற்பனைக்கு வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்தகைய திருட்டு நகைகள் எவரிடமிருந்தாவது பெறப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எனவே திருட்டு நகைகள் விற்பனையைத் தடுக்கும் முகமாக மேற் குறிப்பிட்ட நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு நகைக்கடை வர்த்தகர்களை கேட்டுக்கொள்கின்றேன்- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

# ஒக்சிஜின் சிலிண்டர்கள் விமான மூலம் தருவிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். போதனா வைத்திய சாலைக்கு 50ஒக்சிஜின் சிலிண்டர்கள் கொழும்பிலிருந்து விமான மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

வழமையாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவினால் கப்பலில் எடுத்து வரப்படும் இச்சிலிண்டர்கள் தற்போது அக்கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

சிலிண்டர்களின் தேவை குறித்து யாழ். சிவில்நிர்வாக அலுவலகத்துக்கு வைத்திய சாலை நிர்வாகம் தெரிவித்ததையடுத்து விமானம் மூலம் இச்சிலிண்டர்களை எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-5-15-139)

# சேதங்கள், இழப்புகள் தொடர்பாக பொலீஸில் 14,964 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், செப். 4

சொத்து இழப்புக்கள், வீடு சேதங்கள் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்தில் 14ஆயிரத்து 964 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் இம்முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருவதாக யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

1996 ஆம் ஆண்டு 9 ஆயிரத்து 946 முறைப்பாடுகளும், 1997 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 249 முறைப்பாடுகளும், இவ்வாண்டு ஒகஸ்ட் வரை ஆயிரத்து 769 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (ஐ-5)

# வலி. கிழக்குப் பகுதியில் 12 குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 4

வலிகாமம் கிழக்குப் (கோப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் தற்போது 12 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் இந்தக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இக் குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. எனவே இத் திட்டத்தை 1999 ஆம் ஆண்டுக்கும் நீடிக்க வேண்டும் என்றும்—

அதனடிப்படையில் கோப்பாய்ப் பிரதேசத்திலுள்ள ஏனைய குளங்களையும் புனரமைத்துத்தர வேண்டும் என்றும் உலக உணவுத் திட்ட நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்த போது அவர்கள் அதற்கு இணக்கந் தெரிவித்தார்கள் என்று கோப்பாய்ப் பிரதேச செயலர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

## நிதி ஒதுக்கீடு இல்லை

# உண்ணாவிரதம் இருக்க யாழ். எம். பி பயமுறுத்து

கொழும்பு, செப். 4

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து தமது திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படாததை எதிர்த்து எதிர்வரும் புதன்கிழமை முதல் உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக யாழ். மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஐ. எம். இரியாஸ் அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவும் வகையில் பல திட்டங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் தாம் சமர்ப்பித்ததாகவும்—

ஆனால் அவற்றுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்றும்—அவர் தெரிவித்தார்.

# மெய்வல்லுநர்போட்டி

வட்டுக்கோட்டை துணவி அ.மி.த. க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சென். ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் அதிபர் கா. சிவநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வ. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர் திருமதி ச. சின்னராசா, சங்கரத்தை கிராம சேவகர் கோ. விஜயவேல் ஆகியோரும்கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-ரீ)

# ஆசிரிய முன் சேவைப் பயிற்சி

வலிகாமம் தெற்கு, செப். 4

அண்மையில் ஆசிரியர் சேவையில் சேர்த்துக்கொள்ளப் பட்டபட்டதாரி நியமன ஆசிரியர்களுக்கு ஆசிரிய முன்சேவைப்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

உடுவில் கல்விக் கோட்டத்தில்கடந்த முதலாம்திகதியில் இருந்து 23ஆம் திகதி வரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரிய முன்சேவைப்பயிற்சி வழங்கப்படும். (இ-8-152)

# மாதாந்தக் கருத்தரங்கு

சாவகச்சேரி கைதடி நுணாவிலில் அமைந்துள்ள அறவழிப் போராட்டக் குழு - மாதாந்தம் அறிவியல் கருத்தரங்குகளை நடத்தவுள்ளது.

இதனடிப்படையில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கைதடி நுணாவில் அறவழி செயலகத்தில் 'மனிதனும் ஆன்மீக அபிவிருத்தியும்' என்னும் பொருளில் சாவகச்சேரி பகவான் ஸ்ரீசத்தியசாயிபாவா சேவை நிலையத்தலைவர் வைத்திய கலாநிதி எஸ். கருணானந்தன் உரை நிகழ்த்துவார். (இ-31)

# ப.நோ.கூ. சங்கத்தில் சீனி

யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் சிறாம்பியடி ஒழுங்கையில் உள்ள கிளையில் பங்கீட்டு அட்டையின்றி சீனியைப் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேநீர் கடைகளுக்கு 15 கிலோவுக்கு மேற்படாவலும், தனியாருக்கு 10 கிலோவுக்கு மேற்படாமலும் கிலோ ... பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-3)

# செய்திக் கொத்து

## விதைநெல் கிடைக்கவில்லை

பருத்தித்துறை செப். 4

புலோலி, அம்பன் கமநல சேவைப் பிரிவுகளுக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான விதை நெல் இதுவரை கிடைக்கவில்லை என இப்பகுதி விவசாயிகள் புலோலி கமநல பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். உருத்திரேஸ்வரனுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

சென்ற ஆண்டும் காலம் தப்பியே விதை நெல் கிடைக்கப் பெற்றது. இவ்வாண்டுக்கான விதை நெல்லை விரைவில் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ - 118)

## தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 4

சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினால் யாழ்.மாவட்ட நீதிமன்றங்களுக்கு தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களில் வழக்குகளுக்காக வரும் பெண்கள், வயோதிபர்கள் தளபாட வசதிகள் இல்லாமல் நீண்ட நேரம் நிற்க வேண்டிய நிலை நீதிமன்றங்களில் ஏற்பட்டதை சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியதையடுத்து இவ் உதவி பெறப்பட்டுள்ளது (இ-8-5)

## கட்டடங்கள் அமைப்பு

தென்மராட்சி, செப். 4

தேசிய சர்வோதய நிர்வனத்தினரால் மாசாறு சோரன் பற்று ஆகியபகுதிகளில் பாலர் பாடசாலைக் கட்டடமும், குழாய்க் கிணறு, மல சலகூடம் ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன.

பாலர் பாடசாலை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. (இ-8-117)

## கலாசார மண்டபம்

நீர்வேலி, செப். 4

அச்செழு வீரபத்திரர் கோயிலடியில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் கலாசார மண்டபம் ஒன்று சுமார் 4 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இம் மண்டப வேலைகளை அச்செழு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் முன்னின்று செய்து வருவது குறிப்பிடத் தக்கது. (இ-8-110)

## நீரிறைக்கும் இயந்திரங்கள்

சீரான முறையில் இயங்கும் விவசாய சம்மேளனங்களுக்கு சிடா நிறுவனத்திடமிருந்து கடனடிப்படையில் மேலும் நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என உடுவில் கமநலக் கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார். (இ-8-90)

## பாம்பு தீண்டியது

அரியாலை, செப். 4

விஷப்பாம்புக் கடிக்கு இலக்காகிய குடும்பப் பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சச்சமோட்டை பிரதான வீதியைச் சேர்ந்த திருமதி பி. புஸ்பராணி (வயது - 45) என்பரே பாம்புக்கடிக்கு இலக்கானவர் ஆவார். (ஐ-17)

## மயானத்துக்குக் கிணறு

நீர்வேலி, செப். 3

நீர்வேலி வடக்கிலுள்ள காளயன் மொண்டி என்னும் மயானத்துக்குக் கிணறு, மடம் என்பன இல்லாதது பெருங்குறையாகவுள்ளது.

இது விடயமாக இப்பகுதிப் பொது மக்களும், சனசமூக நிலையங்களும் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக வலி. கிழக்குப் பிரதேசசபையினரின் நிதி ஒதுக்கீட்டினால் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (இ-8-110)

## நூல் வெளியிடப்பட்டது

கணேச மாலையும், நம்வாழ்வார் திருவாய் மொழியும் என்னும் பாடல்களைக் கொண்ட நூல் ஒன்றைச் சுழிபுரம் பஜனைச் சபையார் வெளியிட்டுள்ளனர்.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய உற்சவ நாள்களில் வரும் அடியார்கள் பயன் படும் வகையில் இந்நூல் வழங்கப்படவுள்ளது. (இ-8-28)

## பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செப். 4

இருபாலை கிழக்கு வசந்தபுரம் "வசந்த நிலா" முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தலைவர் நா. அப்புத்துரை தலைமையில் நடைபெறும். இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி வை. தியாகராசாவும், கிராமசேவையாளர் சி. தவரத்தினமும் கலந்து கொள்வர். (ஐ-4)

## விசேட மினிபஸ் சேவை

வடமராட்சி, செப். 4

தொண்டமானாறு செல்வச்சந்நிதிகோயிலில் நடைபெற்று வரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம் விசேட மினிபஸ் சேவைகளை நடத்தி வருகிறது.

பருத்தித்துறை—யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் அனைத்து மினிபஸ் வண்டிகளும் சந்நிதி ஊடாகவும் சேவையிலீடுபட்டு வருகின்றன. (ஐ-173)

## முதலுதவிப் பயிற்சி

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆதரவுடன் யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரால் முதலுதவிப் பயிற்சி நெறி வகுப்புக்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் கந்தர்மடம் ஜனசக்திசனசமூக நிலையத்திலும், அரியாலை காந்தி சனசமூக நிலையத்திலும் ஆரம்பிக்கப்பட உள்ளன. (ஐ-51)

## குத்துவிளக்கு திருட்டு

கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா தேவாலயத்தின் பின்பக்க கதவை உடைத்து கோயிலின் உள்ளே இருந்த பெறுமதி வாய்ந்த குத்துவிளக்கு ஒன்றை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்றது. (ஐ- 17)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கண்ணி அகற்றும் செயற்றிட்டத்தை

# அரசு மேலும் தாமதப்படுத்துகிறது

## ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 4

யாழ்ப்பாண குடாநாட்டில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித்திட்டம் அரசின் நடவடிக்கையால் தாமதப்படுத்தப்படுவது தொடர்கிறது.

ஐ. நா. அபிவிருத்தித்திட்ட யாழ். அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அண்மையில் வெளிவந்த அறிக்கையொன்றுக்கு முரணான வகையில் ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கண்ணி அகற்றும் நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தேவைப்பட்ட முன்னுரிமை பெற்ற வானொலி உபகரணத்திற்கான அனுமதி இலங்கை அரசு மற்றும் பாதுகாப்பு அமைச்சினால் மறுக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் இலங்கை அரசும் (பாதுகாப்பு அமைச்சும்) குறைந்த தர மாற்று உபகரணம் ஒன்றைப் பயன்படுத்தி கண்ணி அகற்றும் பணியினை மேற்கொள்ள முடியுமா என்பதனைப் பரிசீலனை செய்யச் சம்மதித்துள்ளன. அவ்வாறு முடியுமாயின் ஐ. நா. அ. நிகழ்ச்சித்திட்டம் செயற்றிட்டத்தைத் தொடரும்.

துரதிர்ஷ்டவசமாக வேண்டப்பட்ட ஐ. நா. வின் தரமான உபகரணத்திற்கு அனுமதியளிக்காதிருக்க எடுக்கப்பட்ட இலங்கை அரசின் தீர்மானமானது கண்ணி அகற்றும் வேலைத்திட்டத்தினை 3 தொடக்கம் 6 மாதங்களுக்கு தாமதப்படுத்தியுள்ளது.

அத்தியாவசிய மீளக்குடியேற்ற, புனரமைப்புச் செயற்றிட்டங்களைப் பாதிப்படையச் செய்வதும், குறிக்கப்படாத, அகற்றப்படாத கண்ணிநிலங்கள், வெடிக்காத ஆட்லறிகள் என்பவற்றினால் யாழ். மக்கள் அச்சுறுத்தப்படுவது தொடர்வதுமான இந்த நிலைமைக்காக ஐ. நா. வருந்துகின்றது – இப்படி அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)


**MODERN LONDON STAR**

BANK LANE, CHAVAKACHCHERI

**98|99 ஆம் ஆண்டுக்கான**

DIPLOMA,
CERTIFICATE COMPUTER COURSES
10 – 09 – 1998 ஆரம்பம்

ஒவ்வொரு பிரிவிலும் 5 பேருக்கு அனுமதி வழங்கப்படும்.

Full Pritical Approch

- DIRECTOR

(58907)


## நிதி அமைச்சின் செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

நிதி அமைச்சிலும் அதன் கீழ் வரும் நிறுவனங்களிலும் பணிபுரியும் ஊழியர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் நிதியமைச்சின் செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்ட தமக்கு பழிவாங்கப்பட்டவர்கள் பற்றி ஆராய்ந்து நிவாரணம் வழங்கவென அமைக்கப்பட்ட குழுவின் சிபார்சுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக்கூறி 28 நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டதாக ஆயிரத்து 169 பேர் முறையிட்டனர். (ஐ-6)


உடுப்பிட்டி

**அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

பழைய மாணவர் சங்கம்

பத்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்: அ. மி. கல்லூரி பேராசிரியர்
அ. துரைராசா ஞாபகார்த்த மண்டபம்

காலம்: 06 - 09 - 98 ஞாயிறு பி. ப. 3-00 மணி

தலைவர்: Dr. மு. தங்கராசா B VSc. M.Sc.

அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வி சி. வேலுப்பிள்ளை,
செயலாளர்.
உ. அ. மி. கல்லூரி பழையமாணவர் சங்கம்

(சி/4735)


## மகளிருக்கு சட்ட உதவி

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். மகளிர் அபிவிருத்தி நிலையம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்ற உதவியுடன் பெண்களுக்கான இலவச சட்ட உதவி ஆலோசனையை வழங்க முன்வந்துள்ளது.

இல. 19, அரசடி வீதியில் உள்ள மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் ஒவ்வொரு வாரமும் சனி, திங்கள், புதன் ஆகிய தினங்களில் இந்த சட்ட உதவி ஆலோசனை வழங்கப்படவுள்ளது.

சட்டத்தரணி திருமதி சரோஜினி இளங்கோ மேற்படி சட்ட உதவி ஆலோசனையை வழங்குவார். (உ-7)


புதிய
உயர்கல்லூரி
ஆரியகுளம் யாழ்.

பொருளியல்
**A/L 2000**
நிரம்பல் கோட்பாடு
ஆரம்பம்!
5 - 9 - 98
ஆசிரியர்
சண்
(58846)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 – 07 – 1936 | 14 – 09 – 1997 |

அமரர்

**ஆறுமுகம் தர்மையா** B.Sc.

(இளைப்பாறிய உப அதிபர், யா/ தேவரையாழி இந்துக்கல்லூரி)

திதி: 04-09-1998

அன்பு அப்பா,
சின்ன நெருஞ்சிமுள் கூட
பாதத்தை உறுத்தும் பரவாயில்லை,
உடலெங்கும் கிளுவை முட்களாய்
உறுத்துகின்றது உங்கள் பிரிவு!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

குடும்பத்தினர்.

கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(58859)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



சிவதர்ம வள்ளல்

**அமரர் கனகராசா** J, P.

அவர்களின் திருவடிக்கு

''அன்ன சத்திரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி – ஆங்கே
ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

(பாரதியார்)

எங்கள் சனசமூக நிலையத்திற்கு வாரி வழங்கிய வள்ளலே
''உங்கள் மெய் பொய்
நீங்கள் மெய்.''

அமரகவி சனசமூக நிலையம்,
பாரதி வீதி.
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(58908)

## ஓராண்டு நினைவலைகள்



திருமதி

**அன்னமுத்து அருளானந்தம்**

(கண் வைத்தியர்)
(நுணாவில் மேற்கு)

| உதயம் | வானகம் |
|---|---|
| 14 - 04 - 1914 | 14 - 09 - 1997 |

திதி:- 04 - 09 - 1998

அம்மா! அன்பும், பண்பும், கொடையும் நீங்களே
என்று பழகினோர் யாவரும் புகழ்ந்திடவும்
அன்னம் என்றாலும் நடையழகால் கவராது
அன்னமிட்டே வாழ்ந்த அன்னம் நீங்களே
என்று ஏழைகள் எல்லோரும் நெகிழ்ந்திடவும்
எம்மிடை வாழ்ந்த அன்பு அன்னையே!

உளவியல் மனப்பாங்குடன் உத்தமர் எண்மரை
உங்கள் பார்வையினாலேயே கனியக் காத்து
உண்மை நேர்மை பற்றி வெறுமையாய் பேசத் தெரியாது
அதை ஒவ்வொரு செயலிலும் காட்டி ஆளாக்கி
இன்று தூரத்தே சென்றதும் ஏனம்மா?

வாழ்வு ஒரு புள்ளிதான்; அதையும்
அழகிய கோலமாய் ஆக்கி வைத்து
எல்லோரும் 'அன்னம் இருந்தால்' என இரங்கிட
வான் வாழ்வு தேடி நட்சத்திரமாய் சென்றீர்களோ?

உங்கள் கருணைப் பார்வையால் நாம் ஆளானோம்
அந்தப் பார்வை தொடர்ந்தும் எம்மைச் சுற்றுகிறது என்றே!
உங்கள் பிரிவையும் சுமைக்குள் சுகமாய் சுமக்கின்றோம்!
உங்கள் சாடையில் பூட்டன் தரும் நினைவுகளில்
உங்களைக் கண்டு வாழ்கின்றோம் அம்மா!
என்றும் உங்கள் நினைவுகளுடன்;

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

தகவல்;
செல்வி சு. அருளானந்தம்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(58893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஆடும் ஓநாயும்

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச வேண்டும். அதற்கு நாம் (ஐ. தே. க.) ஒத்துழைப்பு வழங்குவோம்.

★ ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் நாம் நிபந்தனையின்றிப் புலிகளுடன் பேசுவோம்; உடன் யுத்தத்தை நிறுத்துவோம்.

—இவை கடந்த ஓரிரு வாரங்களாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பகிரங்கப்படுத்தி வரும் கருத்துகளாகும்.

''பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு புலிகளுடன் பேச்சு நடத்தும் விடயத்தில், அரசுக்கு உதவுவதற்காக அரசுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தோம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக —நேர்மையான— விருப்புடன் நாம் இந்த இணக்கப்பாட்டுக்கு வர அரசு அதைத் தனது அரசியலுக்குப் பயன்படுத்த விரும்புகின்றது; இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அல்ல'' — என்றும் ரணில் கூறியுள்ளார்.

தமிழர் மீது பரிவுள்ளவர்களாக தன்னைக் காட்டும் விதத்தில்ரணில் இப்போது வகுத்திருக்கும் வியூகம் அரசையும் ஜனாதிபதியையும் நிச்சயம் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றது என்பது தெளிவு.

எதிர்வரும் டிசம்பர் அல்லது ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரச உயர்பீடம் தயாராகி வருகின்றது.

அத்தகைய தேர்தல் ஒன்று நடந்தால் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்கு வங்கிகளாக வடக்குக் கிழக்குத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும் அமைவார்கள்.

இந்த வங்கியை முற்றாகத் தனது கைக்குள் போடுவதற்காகவோ அல்லது உண்மையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்திலோ என்னவோ, தனது 'லைனை' மாற்றி ரணில் முந்திக் கொண்டுவிட்டார்.

ரணிலின் இந்தப்போக்கு அரசின் முனைப்பான யுத்தக் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களை கவரக் கூடும்.

இந்த வாக்கு வங்கியின் வீச்சு மாற்றத்தை எதிர்கொண்டு சமாளிப்பதற்காக ரணிலை விட ஈழத் தமிழர்களின் பிரச்சினையை பேசித் தீர்ப்பதில் தனது அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்று காட்ட ஜனாதிபதியும் அவரது அரசும் முயலும் என்பது நிச்சயம்.

அதன் பொருட்டு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற பல்லவி மாறி 'சமாதானத்துக்கான பேச்சு' என்ற பல்லவி பேச்சளவில் அடிபடத் தொடங்கும்.

சந்திரிகாவோ, அன்றி ரணிலோ — யாராயினும் — எந்தச் சிங்களத் தலைவர்களானாலும் — தேர்தலை எதிர்கொள்வதற்காக — இனப்பிரச்சினையை முன்வைத்துக் கோஷமிடுவது — தமிழர்களைப் பொறுத்தவரை ''ஆடு நனைகிறது என்று ஓநாய் கவலைப்பட்ட'' கதை போன்றது தான்.

தமிழர்கள் எச்சரிக்கையாக இருப்பார்களா!க

# அரசாங்கத்தின் தீர்வுப் பொதி இறக்கும் தறுவாயில் உள்ளது!

## வாசுதேவ உதயனுக்குப் பேட்டி

இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அரசாங்கம் முன்வைத்த தீர்வுப்பொதி இறக்கும் தறுவாயில் உள்ளது எனக் கூறலாம். அரசு இந்தத் தீர்வுப் பொதியை 'சீரியஸாக' முன் எடுக்கவில்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தீவிர தொழிற்சங்கவாதியுமான வாசுதேவநாணயக்கார மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

கொழும்பு, ஜாவத்தையில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து 'உதயன்' செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டியில் அரசாங்கத்தின் அணுகுமுறைகளை மிகவும் உணர்ச்சிவசப்பட்டு சாடினார்.

அவருடன் நடத்தப்பட்ட பேட்டியின் விவரம் வருமாறு:-

★ கே: அரசாங்கம் முன்வைத்த தீர்வுப்பொதி பற்றி உங்கள் கருத்து என்ன?

★ ப: தீர்வுப் பொதியா? அது இறக்கும் நிலையிலேயே இருக்கிறது. இந்த தீர்வுப் பொதியை முன் எடுப்பதில் அரசு 'சீரியஸாக' இல்லை என்றே கூறலாம்.

ஐ. தே. க. இந்தப்பொதிக்கு ஆதரவு வழங்கவில்லைஎன்று கூறிக்கொண்டு காலத்தைக் கடத்தாமல் ஐ. தே. க. இணங்கிய விடயங்களை முதலில் நடைமுறைப்படுத்த முனையலாம்.

அதே நேரம் ஐ. தே. க. வுடன் இணங்கிய விடயங்களை போரில் ஈடுபட்டுள்ளவர்களிடம் சமர்ப்பித்து கலந்துரையாட முயற்சிகள் எடுக்கலாம்.

அரசியல் பொதி தொடர்பாக பல்வேறு மட்டங்களில் ஆராயலாம்.

பொதுமக்களுக்கு ஏற்றதாக அவர்களின் விருப்பங்களுக்கு ஏற்றதாக உள்ளதா என்பதை ஆராயலாம்.

இந்தப் பொதி நாட்டில் உள்ள பிரச்சினைகளைக் குறைக்குமா என்று ஆராயலாம்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் என்ன பேச வேண்டும் என்று ஆராயலாம்.

இதன் பின்னர் இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசலாம்.

இதை விட்டு அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் போர் ஒன்றுதான் வழி எனக் கருதுகிறார்கள்; அதற்காக செயற்படுகின்றனர்.

பேட்டிகண்டவர்
உதயன் பிரதிநிதி
ஞா. குகநாதன்

விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் புலிகள் மீது அரசாங்கம் குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறது. இந்நிலை தொடர்ந்தால் பேச்சு ஆரம்பிக்கும் வாய்ப்பும் குறைந்து கொண்டே போகும்.

படையில் உள்ள அதிகாரிகளிடம் சமாதானத்துக்கான உணர்வு பிறக்க வேண்டும். அப்படியான அதிகாரிகள் உருவாக வேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களின் கஷ்டங்களை நீக்கமுடியும். அல்லது ஓரளவு குறைக்க முடியும். மக்களை மதிக்கும் இத்தகைய அதிகாரிகளின் செயற்பாட்டால், போர்அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கும்.

அதன் மூலம் சமாதான சகவாழ்வு ஒன்றை உருவாக்க முடியும் என நம்புகிறேன்.

★ கேள்வி: தாங்கள் அரசில் அங்கம்வகித்துக்கொண்டு அரசுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறீர்களே; அது குறித்து கூறமுடியுமா?

★ பதில்: அரசாங்கத்தில் நாம் அங்கம் வகித்தாலும் சிலவிடயங்களில்— மக்களைப் பாதிக்கும் விவகாரங்களில்— எமது எதிர்ப்பைக் காட்டுகிறோம்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள பேரினவாதிகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுவோம்; அரசாங்கத்தில் இருந்து சில சமயங்களில் வெளியேறினாலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து செயற்படுவோம்.

தமிழ் – முஸ்லிம் மக்களின் உரிமைகள், அவர்களின் அபிலாசைகள் ஆகியவற்றுக்காக தெற்கில் பாரியபிரசாரத்தை மேற்கொண்டு வருகிறோம்; அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து சிறுபான்மை மக்களுடன் தோளோடு தோள் நிற்போம்.

தமிழ் – முஸ்லிம் மக்கள் இந்த அரசுக்கு வாக்களித்திருந்தபோதும் அரசு அவர்களுக்கு ஒன்றும் பெரிதாகச் செய்யவில்லை. அவர்களுக்கு எவ்வளவோ செய்ய அரசுக்கு வசதியிருந்தும் எதுவும் செய்யாதது துர்ப்பாக்கியம்தான்.

தமிழ்மக்கள் அகதிகளாக அலைகிறார்கள், ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் உணவு இன்றிக் கஷ்டப்படும் போது. அவர்களுக்கு வழங்கிய நிவாரணத்தை வெட்ட எடுக்கும் முயற்சி அவர்களை பட்டினி நிலைக்குத் தள்ளும் என்பதை மறுக்க முடியாது.

அவர்களுக்கு உணவுதாராளமாகக் கிடைக்க வசதி செய்யப்படவேண்டியது அவசியமாகும்.

ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அமைச்சர்கள் அரசியல் தீர்வுக்கு எதிராக யுத்தத்தில் நாட்டம் காட்டினால் அரசுக்குள் இருந்து தொடர்ந்து அந்நிலைக்கு எதிராகப் போராடுவோம்.

நாடுமுழுவதும் அவசர காலத்தை விஸ்தரித்து மாகாணசபைத் தேர்தல்களை அரசு பின்போட்டுள்ளது. இது அரசில் இராணுவ ஆதிக்கம் கூடியுள்ளது என்பதையே காட்டுகிறது.

ஆகவே இந்த நிலைக்கு எதிராகக் குரல் கொடுத்துப் போராட தெற்கில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு ஆதரவான ஒரு வர்க்கம் தயாராகுகிறது.

★

## அன்னை தெரேஸாவுக்கு அஞ்சலி

அரியாலை, செப். 4

அன்னை தெரேஸாவின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறும்.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

கவிதாஞ்சலி, அஞ்சலி உரை, வியாதஅரங்கு, இசையாஞ்சலி என்பன இடம் பெறும். (ஐ-17)

# இல்லத்தில் திருவிளக்கு வழிபாடு வாழ்க்கை வளத்துக்கு வழிசெய்யும்

இராசையா ஸ்ரீதரன்

திருவிளக்கு வழிபாடு எமது சைவசமயிகளுக்கு மிகவும் மகோன்னதமானது. உலகமெங்கும் பரந்து வியாபித்து நிறைந்து விளங்கும் இறைவனை – இறைவியை நம் இல்லத்தில் எழுந்தருளச் செய்ய திருவிளக்கு வழிபாடு துணைபுரியும்.

உடம்பென்னும் வீட்டில், உள்ளத்தைத் தகளியாக்கி உணர்வாகிய எண்ணெயை ஊற்றி உயிரைத் திரியாய்த் திரித்து ஞானத்தீயால் தீபம் ஏற்றினால் எமது இறைவனின் திருவடியைக் காணலாம் என்பது அப்பர்வாக்கு. மேலும் அன்பே தகளியாய், ஆர்வமே எண்ணெயாய், இன்புருகு சிந்தை இடு திரியாய், நன்புருகி ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன், நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்'' என்று பூதத்தாழ்வார் பாசுரம் பேசுகிறது.

நாம் வாழ்கின்ற உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. நம்முடைய உடற்கூடு ஐம்பொறிகளால் இயங்குகின்றது. நமது கை, கால்களிலும் ஐந்து விரல்கள் தான் அமையப் பெற்றிருக்கின்றன.

அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதம், சகிப்புத் தன்மை இவை ஐந்தும் பெண்களுக்குரிய உயர்ந்த பண்புகள். எனவே நம் முன்னோர் ஐம்பொறிகளையும் அகத்தடக்கி ஒளிபெறச் செய்ய வேண்டும் என்றே குத்துவிளக்கில் ஐந்து முகங்கள் ஏற்படுத்தினார்கள்.

வெளி இருளைப் போக்க ஒளி ஏற்றப்படுவது போல் அகஇருளைப் போக்க உள்ளொளி ஏற்றப்பட வேண்டும். ''உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேன்'', என்றார் மணிவாசகர். ''இல்லக விளக்கது இருள் கெடுப்பது; சொல்லக விளக்கது சோதியுள்ளது'' என்பது அப்பர் கூற்று. திருத்தொண்டர்களிலே நமிநந்தியடிகளும் கணம்புல்லரும் கலய நாயனாரும் திருக்கோயிலில் திருவிளக்கேற்றியே முத்தி பெற்றுள்ளார்கள்.

## ஞானக் கதிர்

இந்தியாவிலே வேதாரண்யம் வேதபுரீஸ்வரர் திருக்கோயிலில் விளக்கு சற்று மங்கலாக எரிந்து கொண்டிருந்த போது நெய் குடிப்பதற்காகப் போன எலியானது, தன் மூக்கினால் திரியை அப்பால் நகர்த்தி விட, விளக்கு ஒளி வீசிப் பிரகாசித்ததாம். அதன் புண்ணியப் பேற்றினால் அந்த எலி அடுத்த பிறவியில் மாபலி சக்கரவர்த்தியாகப் பிறந்ததாம்.

இவ்வாறு திருநாவுக்கரசர் திருக்குறுகைப் பதிகத்திலே கூறியுள்ளார்.

ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் வாசலைக் கூட்டித் துப்புரவு செய்து நீர் தெளித்துக் கோலமிட்டு குத்து விளக்கேற்றி மகாலட்சுமியை இல்லத்துக்கு எழுந்தருளச் செய்வதாகப் பாவனை செய்து வீட்டுக்குள்ளே குத்து விளக்கை எடுத்துச் செல்ல வேண்டும். இப்போது நமது சைவ ஆலயங்களில் ''குத்து விளக்குப் பூசை'' நடைபெறுகிறது. இது மிகவும் சிறப்பையும், செல்வத்தையும் கொடுக்க வல்லது. பலர் கூடி ஒரே மனதுடன் வழிபாடியற்றும் போது தேவியின் இன்னருள் கிட்டுவது சுலபம்.

குத்து விளக்குப் பூசையில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்திரம், போற்றித் திருவகவல் முதலானவற்றை ஓதலாம். ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்பிகையை நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளச் செய்வதற்கு குத்து விளக்குப் பூசையே நல்லதோர் உபாயமாகும்.

சுமங்கலிப் பெண்கள் தமது கணவன்மாரை நினைத்து விளக்கேற்றி தமது மாங்கல்யம் நிலைக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிவார்கள். கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல நாயகன் கிடைக்க வேண்டுமென்று வேண்டி விளக்கேற்றி வழிபாடு செய்வார்கள்.

சைவ சமயிகளாகிய நாம் திருவிளக்கு வழிபாடு செய்து இல்லச் சிறப்பெய்தி நல்வாழ்வு வாழ்ந்து நற்கதி அடைவோமாக.

★

## நாளை

ஆவணி - 20
சனிக்கிழமை

திதி: சதுர்த்தசி முன்இரவு 07.16 வரை.
நட்சத்திரம்: அவிட்டம் முன்இரவு 07.29 வரை.
சுபநேரம்: 03 04 - 04 34
ராகுகாலம்: 09 04 - 10 34
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

இன்பம், துன்பம் ஆகிய இரண்டின் இடைச் செயல்களால் ஏற்படும் கூர்மையான போராட்டங்களையெல்லாம் விவேகத்தால் வென்று எவன் ஒருவன் ஆன்மாவை அறிய முயல்கின்றானோ அவனே மனிதன்.

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராணுவ ஹெலியை அனுமதியின்றி தரையிறக்கியது பற்றி விசாரணை

கொழும்பு, செப். 4

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான தாக்குதல் ஹெலி ஒன்று அனுமதியில்லாமல் மாதம்பையிலுள்ள தெமபிட்டிய வயல் வெளியில் தரையிறக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி தெரிவித்தார்.

தொழில் நுட்பக் கோளாறு காரணமாகவே இந்தக் ஹெலி தரையிறக்கப்பட்டது. என அக்கிராமவாசிகள் நினைத்தபோதிலும் ஹெலியில் இருந்து இறங்கிய இருவர் அருகிலுள்ள வீடொன்றுக்குச் சென்றனர் எனவும் அந்த வீட்டுக்காரர் ஹெலியில் இருந்து இறங்கியவர்களின் உறவினர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப்படைத் தளபதியின் பணிப்பின் பேரில் விசேட விசாரணைக் குழுவொன்று தெமபிட்டிய கிராமத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

யுத்தம் நடைபெற்று வரும் இவ்வேளையில் தாக்குதல் ஹெலியை தனிப்பட்ட காரணங்களுக்காக பல்வேறு இடங்களில் தரையிறங்குவது சட்ட விரோதமான செயல் என விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசாரணைக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் அந்தக் ஹெலியை ஓட்டிச் சென்றவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## இலவச பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 4

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய்ப் பிரிவினால் பத்திரிகையாளர் அடிப்படைப் பயிற்சிநெறி இலவசமாக நடத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறிக்கு ஜி.சீ.ஈ சாதாரண தரத்தில் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த, 18 – 45 வயதிற்கு உட்பட்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை கட்டைப்பிராயில் இயங்கும் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரீ)

## கசிப்பு அருந்திய நரி நால்வரைக் கடித்தது!

கொழும்பு, செப். 4

பிடிகல, கொடாமுண பகுதியில் நடைபெற்ற திருமண வைபவத்தில் கலந்து கொள்ள வந்த நால்வரை நரியொன்று கடித்துள்ளது.

அப்பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்பை அருந்திய நரியே மதுபோதையில் திருமண வீட்டிற்கு வந்த நால்வரைக் கடித்துள்ளது. நரியால் கடியுண்ட நால்வரும் காலி, கரைப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதிக் காட்டில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட அக்கிராம மக்கள் நரியைக் கண்டு பிடித்து அதனைக் கொன்றனர். (ஐ-10)

## இங்கிலாந்தில் 'வடலிக்கூத்தர்'

மேற்குலக நாடுகளுக்கு மீண்டும் கலைப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் யாழ். திருமறைக் கலா மன்றத்தின் கலைக் குழுவினராகிய ''வடலிக்கூத்தர்'' பிரான்ஸ், சுவிஸ் ஆகிய நாடுகளில் தங்கள் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு தற்பொழுது இங்கிலாந்து சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய கலைகளாகிய நாட்டுக்கூத்து, இசை நாடகம் என்பவற்றுடன் யாழ். மக்களின் இன்றைய நிலையை எடுத்துக் காட்டும் ''ஜீவ பிரயத்தனம்'' என்னும் நவீன நாடகமும் புலம்பெயர்ந்தோரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளன.

இக் கலைக் குழுவினர் ஹொலன்ட், ஜேர்மனி, இத்தாலி முதலிய நாடுகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர். (ஐ-8)

# நீரேரித் திட்டம் கைவிடப்பட்டதால் 800 ஹெக்ரயர் வயல் நிலம் பாதிப்பு!

யாழ்ப்பாணம், செப். 4

யாழ். உவர் நீரேரித் திட்டம் கைவிடப்பட்டதால் கோப்பாய்ப் பிரதேசத்தில் 800 ஹெக்ரயர் வயல் நிலம் பயிர்ச்செய்கைக்கு உதவாத தரிசு நிலமாக மாறியுள்ளது.

கடந்த ஞாயிறன்று இருபாலையில் நடைபெற்ற உவர் நீரேரித்திட்ட ஆய்வுக் கருத்தரங்கில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவில் டாக்டர் தியாகராசா தலைமையில் இந்த ஆய்வுக் கருத்தரங்கு நடைபெற்றது.

யாழ். உவர் நீரேரித் திட்டத்தை விரைந்து செயற்படுத்துவதன் மூலம் 800 ஹெக்ரயர் நிலத்தை மீண்டும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும். அத்துடன் மேலும் ஹெக்ரயர் நிலத்தை எதிர்கால ஆபத்தில் இருந்து பாதுகாத்து அவற்றிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் — என்று முன்னாள் பேராசிரியர் கலாநிதி நவரட்ணராஜா தெரிவித்தார்.

இந்தத்திட்டத்தை செயற்படுத்த அரசாங்கமோ அல்லது வெளிநாடுகளோ உதவி வழங்கும் என்று எதிர்பார்ப்பதை விட்டுவிட்டு முதலில் மக்கள் இந்த வேலைகளைச் செய்ய முன்வரவேண்டும். அதாவது சமூக நல அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இந்தத் திட்டத்தில் முன்னர் செயற்படுத்திய பகுதிகளில் உள்ள சிறிய திருத்த வேலைகளைச் செய்வதற்கு முன்வரவேண்டும். அவ்வாறு செய்ய முற்பட்டால் பின்னர் அரசாங்கம் அல்லது வெளிநாடுகள் வந்து எம்முடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த முனைவார்கள் — என்றும் அவர் தெரிவித்தார்.

இத் திட்டத்தை உயிர்ப்பித்துச் செயற்படுத்துவதற்கு நிபுணத்துவம் வாய்ந்த குழுவொன்றை அமைப்பது என்றும்—

இக் கருத்தரங்கு தொடர்பான முடிவுகளைக் கோப்பாய்ப் பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு மகஜராகச் சமர்ப்பிப்பது என்றும் கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் 'யாழ். ஏரித் திட்டமும் அதன் விவசாய அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் உதவி விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் த. சிவலோகநாதனும்—

'சூழல் பாதுகாப்பு' என்ற தலைப்பில் 'ஊற்று' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. விக்கினேஸ்வரனும்—

'கோப்பாய் கடலேரியும், அதன் அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற அதிபர் க. இ. குமாரசாமியும்—

'யாழ். ஏரித்திட்ட மீன்பிடித் தொழில்' என்ற தலைப்பில் பேராசிரியர் கலாநிதி சித்திர வடிவேலும்—

'நீர்ப்பாசனமும் நீர்வளமும்' என்னும் தலைப்பில் நீர்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் திரு. கணேசராஜாவும்—

'கடல் நீரேரியின் அபிவிருத்தி' என்ற தலைப்பில் பொறியியலாளர் திரு. யோகராசாவும் கருத்துரை வழங்கினர். (ஐ-6)

## இசை நிகழ்ச்சியில் சிப்பாய்கள் அட்டகாசம்

புத்தளத்தைச் சேர்ந்த அட்டவில்லு என்ற இடத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சி ஒன்றுக்குப் பாதுகாப்பு வழங்கச் சென்றிருந்த பொலிஸ்காரர் ஒருவரிடமிருந்து துப்பாக்கியை அபகரித்துச் செல்ல முற்பட்ட இருவரைப் புத்தளம் பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களில் ஒருவர் புத்தளம் இராணுவ முகாமில் பணியாற்றும் சிப்பாய் எனவும் மற்றவர் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய சிப்பாய் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் இசை நிகழ்ச்சியைக் கேட்டு ரசிக்க வந்தவர் ஒருவரை மற்றொரு சிப்பாய் தாக்கியுள்ளார்.

இந்தச் சிப்பாயும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது. [ஐ–10]

## ஊழியர் சங்க அங்கத்துவம்

கல்முனையைத் தலைமையகமாகக் கொண்ட அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தில் புதிதாக அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் கல்வி வலயம் - 1 இல் சங்க இணைப்பாளர் சி. பிறைசூடியுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## ஏணைக்குள் குழந்தையை விசர் நாய் கடித்தது!

நெல்லியடி, செப். 4

வீட்டு விறாந்தையில், ஏணைக்குள் உறங்கிக்கொண்டிருந்த ஒன்றரை மாத பச்சிளங் குழந்தையை நாய் கடித்தது. குழந்தையின் கைகளிலும், கால்களிலும் காயம் ஏற்பட்டது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் வடமராட்சிப் பகுதியிலுள்ள துன்னாலை வடக்கில் இடம்பெற்றது.

பெற்றோர் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சமயம், அங்கு உட்புகுந்த நாய், ஏணைக்குள் உறங்கிய பச்சிளங் குழந்தையைக் கடித்ததென்றும், குழந்தை வீரிட்டு அழும் சத்தம் கேட்டு தாய் ஓடிவந்த சமயம் நாய் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சபாநாதசர்மா சார்நிதா [ஒன்றரை மாதம்] என்ற குழந்தையே நாயினால் கடியுண்ட நிலையில் மந்திகை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

குழந்தையைக் கடித்த நாய் விசர் நாயாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

## அயர்லாந்து நிபுணர்களின் முழு நாள் பயிலரங்கு

கொழும்பு, செப். 4

அயர்லாந்து நிபுணர்கள் பங்குபற்றும் முழு நாள் பயிலரங்கு தென் கரையோரத்தில் அமைந்துள்ள உல்லாசப் பயணிகள் விடுதியில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அயர்லாந்தின் மோதல் இணக்கப்பாட்டு நிபுணரும், அல்ஸ்ரர் பல்கலைக் கழக அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவருமான பேராசிரியர் தோமஸ் கிறாண்ட்பிறேஸர், வட அயர்லாந்துமகளிர் கூட்டமைப்பின் முன்னணித் தலைவரும், அல்ஸ்ரர் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி செல்வி கார்மல் றோல்ஸ்ரன் ஆகிய அரசியல் நிபுணர்கள் இந்தப்பயிலரங்கில் கருத்துரை வழங்கவுள்ளனர்.

பயிலரங்கின் அதி முக்கிய உரையை நீதி அரசியலமைப்பு விவகார இன உறவு அலுவல்கள் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வழங்கி வைபவரீதியாக ஆரம்பித்து வைப்பார்.

அரச தரப்பு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியலமைப்புச் சட்ட நிபுணர்கள், அரசியல் விஞ்ஞானிகள், நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சின் உயர்நிலை அதிகாரிகள் ஆகியோர் இப் பயிலரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

பயிலரங்கு அமாவுகளுக்குத் தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் பேராசிரியர் காமினி கரவெல, அரசியலமைப்புச் சட்ட நிபுணர் கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரத்தன, பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன, 'மேர்ஜ்' தலைவர் திருமதி நிமல்கா பெர்ணான்டோ ஆகியோர் தலைமை வகிப்பார்கள்.

இனக் கல்விக்கான சர்வதேச நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் எம். சோமசுந்தரம் பயிலரங்கின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்படுவார். செயலமர்வின் அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஆராய்ச்சி நிபுணர்கள் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான பிரித்தானியாவின் தூதர் டேவிட் ரைடிங்ஹாம் இப் பயிலரங்கில் கலந்து கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1998 ஆவணி மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. இதனைப் பெறுகின்ற விவசாயிகள் தவறாது தமது ஓய்வூதியத்தைப்பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீருடை விநியோகம்

சாவகச்சேரி, செப். 4

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணிகள் கடந்த முதலாம் திகதி [illegible] பாடசாலையில் [illegible] வழங்கப்பட்டன. (ஐ-31)

## தாதிய சேவையில் பட்டப்படிப்பு!

தாதியசேவையில் பட்டப்படிப்பு கற்கைநெறி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

முதன் முறையாக ஆரம்பிக்கப்பட உள்ள இப்பட்டப்படிப்புக் கற்கைநெறிக்கு நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் 30 பேர் புள்ளி அடிப்படையில் தெரிவாகியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் நடத்தப்பட்ட இப்போட்டிப் பரீட்சைக்கு 65 தாதிய உத்தியோகத்தர்கள் தோற்றினர்.

யாழ். போதனாவைத்தியசாலையில் இருந்து இப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கே. நந்தகுமார், கே. சிவநாதன், ரி. சந்திரமௌலீஸ்வரன், சி. பெனிற்றோ குறூஸ் ஆகிய நால்வரும் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான கற்கைநெறி கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ளது.

இப்பட்டப்படிப்புக்கான கால எல்லை ஒருவருடமாகும்.

இலங்கை மருத்துவசங்கத்தில் மருத்துவதாதிய உத்தியோகத்தராகப் பதிவுசெய்து நான்கு வருடங்கள் பூர்த்தியடைந்தவர்கள் மாத்திரமே இப்பட்டப்படிப்பிற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற

## சைவசமய விவகாரக் குழு

தடத்தும்

## சமய அறிவுப்போட்டி - 1998

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு வழமைபோல் இவ்வருடமும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான 04 பிரிவுகளைக் கொண்ட சமய அறிவுப் போட்டியை (எழுத்துப் பரீட்சை) வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய நான்கு நிலையங்களிலும் நடத்தி எதிர்வரும் விஜயதசமித் தினத்தன்று பரிசளிப்பினையும் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்கள் பாடசாலை அதிபரிடமிருந்தோ அன்றேல் நல்லூரிலுள்ள மாநகர சபை அலுவலகத்திலிருந்தோ தேவையான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்திற்கமைவான மேற்படி போட்டியில் தவறாது பங்குபற்றி சமய அறிவினை பெருக்கிக் கொள்ளுமாறு அனைத்து மாணவ, மாணவியரையும் அன்புடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
03-09-1998 யாழ். மாநகராட்சி மன்றம்
(சி/4762)

## கண்ணீர்க் காணிக்கை

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
**திரு. சுப்பிரமணியம் கோபாலசிங்கம்**
(களஞ்சியப் பொறுப்பாளர் கே. கே. எஸ்.)
அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி
**கணபதிப்பிள்ளை தில்லாத்தைபிள்ளை**

அவர்கள் 30-8-98 அன்று மீளாத்துயில் கொண்டதையிட்டு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.
(58929)

## மரத்தால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், செப். 4

ஓலைவெட்ட பனைமரத்தில் ஏறியவர் அதிலிருந்து தவறிவிழுந்து காயமடைந்தார்.

அராலிப்பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கனகன் பரமகுரு (வயது 40) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-5)

## BOSCO

25, றக்கா றோட்.

SPOKEN ENGLISH

By: **BRITTO**

பிரிவு - 2
ஆரம்பம்: 05 - 09 - 98
Sat., Sun. 7-00 — 8-00
(58935)

**புலமைப்பரிசில் - 1999**

1 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற்றோர்

(வகுப்புகளும் நடைபெறுகின்றன.)

1. ச. பார்கவி
யா. இ. ம. ஆ. பா
2. சி. துஷானி
யா. இ. ம. ஆ. பா.
3. சு. யசோதரன்
ஆ. மெ. மி. வி.
4. செ. நிமலன்
5. யோ. ஜென்சி
யா. இ. ம. ஆ. பா.
6. வி. ஜசிந்தன்

அடுத்த பரீட்சை
06 - 09 - 98

BOND - யாழ். நகர்
(58932)

## சமய சந்திதிகளில்

சுன்னாகம் கிழக்கு ஊரிசாட்டி சிவபூதவராயர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கும் சண்டேஸ்வரர் உற்சவம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (உ-7)

★ ★ ★

குப்பிளான் அருள்மிகு ஸ்ரீகௌரி அம்பாள் (கன்னிமார்) ஆலயத்தில் வருடாந்த இலட்சார்ச்சனை கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை விசேட சங்காபிஷேகம், பூசையுடன் இலட்சார்ச்சனை நிறைவுபெறும்.

தினசரி உரும்பிராய் அன்னைதாசன் கவிமணி க. ஆனந்தராசா பக்கவாத்தியசகிதம் ''அருளும் அருளாளர்களும்'' என்ற தலைப்பில் இசைச்சொற்பொழிவாற்றி வருகிறார். (உ-30)

★ ★ ★

நீர்வேலி வடக்கு அருள்மிகு ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் கோயில் மண்டலாபிசேக பூர்த்தி விழாவையொட்டி இன்று வெள்ளிக்கிழமை சகஸ்ர சங்காபிஷேகமும் பகல் அன்னதானமும் நடைபெறும்.

பிற்பகல் நவசக்தி அர்ச்சனை நடைபெறுவதோடு திருவூஞ்சலும், சுவாமி வீதி வலம வருதலும் இடம்பெறும். (உ-110)

★ ★ ★

சரசாலை - நுணுவில் அருள்மிகு ஸ்ரீசிதம்பர விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மணவாளக்கோலத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விசேட சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

மாலை 4.00 மணிக்கு பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறும். பின் சுவாமி வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

நண்பகல் 12.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (உ-30)

யாழ். போதனா வைத்தியசாலை சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ சிவஞானவைரவ சுவாமி தேவஸ்தான மணவாளக்கோல அஷ்டோத்தர சதகலச சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை ஆவணி ஓணநன்னாளில் நடைபெறும்.

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீதலங்காவல் பிள்ளையார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருவிளையாடற் புராணப் படிப்பு ஆரம்பமாகிறது.

புராணபடன பௌராணிகர்கள் பலர் இதில் கலந்து கொள்வர். (இ-7)

★ ★ ★

உரும்பராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி விசேட அபிஷேக ஆராதனைகளுடன் நிறைவு பெறவுள்ளது.

★ ★ ★

மல்லாகம் புதுமை மாதா ஆலய வருடாந்த விழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

★ ★ ★

கோப்பாய் வடக்கில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். (இ-15)

## இராமநாதன் கல்லூரி சாம்பியன்

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் திருகோணமலையில் நடைபெற்று வந்த பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி சாம்பியனானது.

15 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்து ம.வி. இரண்டாம் இடத்தையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

இந்த மூன்று அணிகளும் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகின. (இ-3)

## கேள்வி அறிவித்தல்

### பிரதம பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம்.

யாழ்ப்பாணம்.

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண நிர்மாணத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட கேள்விச் சபையினால் 1998 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பிரதம பொறியியலாளர் காரியாலயம், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் எமது காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்கு தரம் 'எம் 9' இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மாத்திரம் கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தினால் (இக்ராட்) வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேணடும்.

தகுதியுடையோர் உரிய கேள்வி வைப்புப்பணத்தை யாழ்ப்பாண, நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத்திணைக்களத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டை பெற்று கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு பணம் |
|---|---|---|
| 1. கைதடி விழிப்புலனற்றோர் விடுதி கட்டடத் திருத்த வேலை | 7100/- | 500/- |
| 2. கரவெட்டி சிறியோர், முதியோர், அநாதை இல்ல பூரணப்படுத்தப்படாத கட்டடத்தின் பகுதி நிர்மாண வேலை (பரமானந்த ஆச்சிரமம்) | 9600/- | 500/- |
| 3. திருநெல்வேலி சிறுவர் அநாதை இல்ல கட்டடங்களின் திருத்த வேலை | 12500/- | 500/- |
| 4. இளவாலை றோமன் கத்தோலிக்கமகளிர் அநாதை இல்ல கட்டடத் திருத்தவேலை | 6400/- | 500/- |
| 5. திருநெல்வேலி சிறுவர் அநாதை இல்ல புனரமைப்பு வேலைகள் (கிணறு, சுவர், நீர்த்தாங்கி) | 9200/- | 500/- |
| 6. நவீல் பாடசாலை திருத்தவேலை கைதடி | 2800/- | 250/- |

கேள்விப்பத்திரங்களை 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி முற்பகல் 4-45 மணி வரை யாழ்ப்பாண, நிர்மாண, நிறைவேற்றுபொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இவை தொடர்பான மேலதிக விவரங்களை நிறைவேற்றுப் பொறியியலாளர், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாண அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம், மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்க முடியும்.

எந்திரி. ந. சுந்தரமூர்த்தி,
பிரதமபொறியியலாளர்,
நிர்மாணத்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

பிரதமபொறியியலாளர் அலுவலகம்,
நிர்மாணத்திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4759)

## அன்னை திரேசா முதல் வருட நினைவுரை

காலம்:- 06-09-1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மாலை 5.00 மணி
இடம்:- மன்ற கேட்போர் கூடம்

கருத்துரை வழங்குபவர்
**திரு. கோ. சி. வேலாயுதம்**
(முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)

கவிதாஞ்சலி
**நவாலியூர் நாயகி**

அன்னையின் நினைவில் நனைய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**திருமறைக்கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4761)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியை
**திருமதி வினோதினி வெங்கடேஸ்வரனின்**

மரணச் செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்க
நலன் விரும்பிகள்.

யா/வல்வை மகளிர் மகா வித்தியலாயம்,
வல்வெட்டித்துறை.
(சி/4760)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

பொருள்:- ''தம்பதியரின் புரிந்துணர்வு''
கருத்துரை வழங்குபவர்:-
அருட்கலாநிதி T. J. கிருபாகரன் D.C.L
காலம்:- 06-09-1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- பி. ப. 3.00 மணி
இடம்:- "அகவொளி"
குடும்பவளத்துணை நிலையம்,
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் பங்குபெற்று பயன்பெற அழைக்கின்றோம்.

இயக்குநர். (58876)



யாழ்ப்பாண மருத்துவ சங்க
ஆதரவில்
யாழ்ப்பாண மருத்துவ சங்க
**நூலக நிதிக்காக**
யாழ். மருத்துவ பீட மாணவர்கள்
அளிக்கும்
முற்றிலும் புதிய பாணியிலான

## "இன்னிசை அருவி"

காலம்: [05-09-98 / 06-09-98] மாலை 2.00 — 5.00 மணி (புதிய நேரம்)

இடம்: கைலாசபதி கலையரங்கு (யாழ். பல்கலைக்கழகம்)

முக்கிய குறிப்பு:
★ ஒரு நுழைவுச்சீட்டுக்கு ஒருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
★ இசை அரங்கின் நுழைவாயில்கள் 1.55 மணிக்கு (புதிய நேரம்) மூடப்படும்.
★ ரிக்கற்றுகளில் உள்ள திகதிகளின் படியே அனுமதிக்கப்படுவர்.

காலம் 05-09-98 : 5ஆம் திகதி ரிக்கற் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
06-09-98 : 6ஆம் திகதி ரிக்கற் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
(58906)



எமது இன்றைய
புதிய வெளியீடுகள்!

★ ஜக்கிஜானின் கராட்டிப் படம்
★ ரகுலா படம்
★ சேர்க்கஸ்
★ தாக்குதல் படங்கள்
★ விண்வெளிப் படங்கள்
★ கார்ட்டூன் சித்திரங்கள்

இவை அனைத்தும் வீடியோ CD யில் வெளிவந்துள்ளன. இவை நேரடி CD யில் பதிவு செய்து தரப்படும்.

மற்றும்

★ K. பாலச்சந்தரின் நாடகங்களும்பதிவுசெய்து தரப்படும்.

★ எம்மிடம் பழைய, புதிய படக் கொப்பிகள் மொத்தமாக விற்பனைக்குண்டு.

**நரேன்**
வீடியோ சென்ரர்
140, பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4757)


## வன்னி அகதி...

(முதலாம் பக்கத் தொடர்)
அகதி முகாம்களில் தங்கி இருப்பவர்களுக்கு மட்டுமே உலர் உணவு நிவாரணம் இனிமேல் வழங்கப்படும்.

★ யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னியில் முகாம்களுக்கு வெளியே வாழும் மக்கள் நிவாரணத்தைப் பெற வேண்டுமானால் மன்னார் நகரில் உள்ள அகதி முகாம்களுக்கு வந்து தங்க வேண்டும். அப்படித் தங்கினால் அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பும் வரை நிவாரணம் வழங்கப்படும்.

★ நிவாரண வெட்டுத் தொடர்பான அறிவிப்பு வெளியானதை அடுத்து ஜூன், ஜூலை மாதங்களுக்கான நிவாரணம் வழங்கப்படவில்லை. மாவட்டத்துக்குள் இடம்பெயர்ந்தவர்களில் 30 சதவீதமானவர்களுக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து தங்கியுள்ளவர்களில் 50 சதவீதமானவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அதன் பின்பே ஒகஸ்ட் மாதத்துக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும். (இ–3)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்)
னைகள், உயிரிழப்புக்கள் குறித்த தகவல்கள் பெரிதாக வருவதில்லை. மேற்கு நாட்டுப் பிரச்சினை உடனுக்குடன் ஐ. நா. போன்ற அமைப்புக்களுக்கு கிடைக்கிறது.

இங்குள்ள மக்களின் கஷ்டங்கள், இழப்புக்கள்குறித்து ஐ. நா. சபையின் கவனத்துக்கு கொண்டுவருகிறேன்— என்றார்.

மற்றொரு கேள்விக்குப் பதில் அளித்த அவர், ''இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் எமது ஆலோசனை கோரப்பட்டால் அதற்கு உதவுவோம்.'' என்றார். (இ–3)


எமது ஒறிஜினல்
வீடியோ CD
வெளியீடுகள்!

★ இதயக் கோயில்
★ நிலாவே வா
★ பெரிய இடத்து மாப்பிள்ளை
★ கோகுலம்
★ அரிச்சந்திரா
★ திருமூர்த்தி
★ எல்லாமே என் ராசா தான்
★ ஒரு கைதியின் டயறி
★ சாந்தி
★ அலைகள் ஓய்வதில்லை
★ புது மனிதன்
★ தாவணிக் கனவுகள்
★ டார்லிங் டார்லிங்டார்லிங்
★ கலாட்டா கல்யாணம்

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.
(சி/4752)



## NEW SCIENCE COLLEGE

வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.

**இந்துநாகரிகம்**
**G. A. Q., B. A.**
[பேராதனை, யாழ்ப்பாணம்]

ஆசிரியர்:- சிவ. மகாலிங்கம்
B.A. Dip in. Ed.
M. A. G. (இந்துநாகரிகம்)

ஆரம்பம்:- 05-09-98 சனி பி. ப. 4.00 மணி
(58992)



## ★ புதுக்கடைத் திறப்பு விழா ★



## ★ V. S. B. GROUP ★



**(சில்லறை மொத்த வியாபாரிகள்)**

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் நாளை (05 09-1998)
சனிக்கிழமை பகல் 10.50 முதல் 12. 50 மணி வரையுள்ள
விருச்சிக லக்கின சுபவேளையில் மேற்படி நிறுவனம்

**99, 105, மின்சார நிலைய வீதியில்**

உயர்திரு. சி. வி. கந்தையா சிவஞானம் அவர்களால்
ஆரம்பித்து வைக்கப்படும் என்பதனைத் தெரியத் தருவதோடு அத்தருணம் எமது அன்பு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

V. S. B. GROUP
275, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

நன்றி

பங்காளர்கள்.



## ★ புதுக்கடைத் திறப்பு விழா ★



**மெண்டிஸ் அன் கொம்பனியினரின் மதுபான தயாரிப்புகளின்**
யாழ். குடாநாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள்:

## NEW PARADISE
## புதிய சொர்க்கம்

173, பலாலி வீதி. திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 20 ஆம் நாள் நாளை (05 – 09 – 1998)
சனிக்கிழமை பகல் 10. 50 முதல் 12. 50 வரையுள்ள விருச்சிக லக்கின சுபவேளையில்
உத்தரவுபெற்ற **மதுபான மொத்த விற்பனை நிலையம்** ஒன்று எம்மால்
திறக்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரியத்தருகின்றோம்.
அத்தருணம் இனிய வாடிக்கையாளர்களும், நண்பர்களும் வருகை தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.
உத்தரவு பெற்ற மதுபான விற்பனையாளர்களுக்கு மட்டும் விற்பனை மேற்கொள்ளப்படும்.

(சி/ 4748) நன்றி நிர்வாகிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.